| | PRIMARY SCHOOL<br>SEMESTRAL ASSESSMENT 2<br>TAMIL LANGUAGE - PAPER 2<br>PRIMARY 3 |
|---|---|

Name:______________


Class: _______

Date: 8th October

Duration: 40 mins

Marks: 20

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.



| | |
|---|---|
| தாயாரின் தோழி | பல் வலி |
| சாக்லட் | பல மருத்துவரிடம் |
| நிறைய சாப்பிட்டான் | சொத்தைப் பல் |
| தடுத்தார் | பிடுங்கினார் |
| கேட்கவில்லை | அறிவுரை |

PRIMARY SCHOOL
SEMESTRAL EXAMINATION 2

Name: ____________________ (    ) Class: P3__

**<u>சொற்பொருள்</u> (5 ம.பெ)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொல்லின் பொருளை உணர்த்தும் மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

1. நான் என் நண்பனுடன் **<u>பலமுறை</u>** நூலகத்திற்குச் சென்றிருக்கிறேன்.

   1) பலதடவை    2) எப்பொழுதும்
   3) அடிக்கடி    4) ஒருமுறை    (      )

2. கலா பாடல் போட்டியில் தோல்வி அடைந்ததால் மிகவும் **<u>கவலையாக</u>** இருந்தாள்.

   1) மகிழ்ச்சியாக    2) சோகமாக
   3) சுறுசுறுப்பாக    4) ஆச்சரியமாக    (      )

3. இன்று என் பாட்டி சமைத்த **<u>உணவு</u>** மிகவும் ருசியாக இருந்தது.

   1) தின்பண்டம்    2) இறைச்சி
   3) தோசை    4) சாப்பாடு    (      )

4. யானையின் **<u>அருகில்</u>** சென்ற ராஜா அதை தடவிக் கொடுத்தான்.

   1) பக்கத்தில்    2) தூரத்தில்
   3) முன்னால்    4) பின்னால்    (      )

5. நாம் மற்றவர்களுக்குத் **<u>தொல்லைக்</u>** கொடுக்கக் கூடாது.

   1) துன்பம்    2) பொருள்
   3) பணம்    4) கவலை    (      )

## செய்யுள் (5 ம.பெ)

**கீழ்க்காணும் செய்யுளை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து எழுது.**

6. ஓதுவது ______________________.

7. ______________________ இகழ்ச்சி.

8. உடையது ______________________.

9. ______________________ ஒழுகு.

10. நன்றி ______________________.

விளம்பேல் ஒழியேல்
ஏற்பது
ஒப்புரவு மறவேல் இட்டு

11 முதல் 15 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான *வேற்றுமை உருபு* ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.
(10 மதிப்பெண்கள்)

லீலாவும் மாலாவும் நெருங்கிய தோழிகள். அவர்கள் ஒன்றாம் ____(11)____ நான்காம் வகுப்புவரை ஒரே வகுப்பில் படித்தார்கள். ஒரு நாள் மாலா ____(12)____ வரவில்லை. அவர்களுடைய ஆசிரியர் ____(13)____ காய்ச்சல் என்று மாணவர்களிடம் கூறினார். லீலாவுக்குக் கவலையாக இருந்தது. அவள் பள்ளி முடிந்ததும் ____(14)____ பார்க்கச் சென்றாள். அவள் கொண்டு வந்த வீட்டுப்பாடத்தை ____(15)____ கொடுத்தாள். மாலா லீலாவைப் பார்த்து மகிழ்ந்தாள்.

11. (1) வகுப்புக்கு (3) வகுப்பிலிருந்து
(2) வகுப்பில் (4) வகுப்பின் ( )

12. (1) பள்ளியை (3) பள்ளியில்
(2) பள்ளியிலிருந்து (4) பள்ளிக்கு ( )

13. (1) மாலாவுடைய (3) மாலாவோடு
(2) மாலாவுக்கு (4) மாலாவின் ( )

14. (1) மாலாவுடன் (3) மாலாவை
(2) மாலாவிடமிருந்து (4) மாலாவுக்கு ( )

15. (1) அவளிடம் (3) அவளின்
(2) அவளை (4) அவளுடைய ( )

**ஒலி வேறுபாடு** (5 ம.பெ)

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு மிகச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.**

16. எனக்குப் பிடித்தமான நிறம் ________________.

( நீலம், நீளம் )

17. கனத்த ________________ பெய்ததால் வெள்ளம் ஏற்பட்டது.

( மலை, மழை )

18. என் தம்பி செடி நட ________________ தோண்டுகிறான்.

( குளி, குழி )

19. நீ உன் நண்பனை உன் பிறந்தநாள் விழாவுக்கு ________________.

( அலை, அழை )

20. நாய் நன்றியுடன் தன் ________________ ஆட்டியது.

( வாளை, வாலை)

<u>கருத்து விளக்கப்படம்</u> (5 ம.பெ.)

<u>விளம்பரத்தைப் படி.</u>

குடும்பத்தினர் ஒன்றுகூட

# சாங்கி கடற்கரையில் குடும்ப தினம்

**நாள்:** சனிக்கிழமை, 8 டிசம்பர் 2010

**நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை

- குடும்பத்தோடு மணல்வீடு கட்டும் போட்டி
  4 உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்!
  பதிவு செய்துகொள்ள வேண்டும்!

- சிறுவர்களுக்குப் படம் வரையும் போட்டி
  எழுதுபொருள்களையும் வண்ணங்களையும் கொண்டு
  வரவேண்டும்!

- பெரியவர்களுக்குக் கயிறு இழுக்கும் போட்டி – கட்டணம் உண்டு!

***நிகழ்ச்சி முடியும் வரை இருப்பவர்கள் அதிர்ஷ்டக் குலுக்கில் கலந்துகொண்டு பரிசுகளை வெல்லலாம்!***

சரியான விடையை எழுது.

21. குடும்ப தினம் ____________________ நடைபெறுகிறது.

22. குடும்பத்தினர் சேர்ந்து ____________________ கட்டும் போட்டி நடைபெற உள்ளது.

23. சிறுவர்கள் படம் வரைவதற்கு ____________________ கொண்டு வரவேண்டும்.

24. பெரியவர்களுக்கு ____________________ இழுக்கும் போட்டி நடைபெற உள்ளது.

25. ____________________ வெல்ல விரும்புவோர் நிகழ்ச்சியின் இறுதிவரை இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| கயிறு | வண்ணங்களை |
| மணல் வீடு | சாங்கி கடற்கரையில் |
| பரிசுகளை | கட்டணம் |

## தெரிவுவிடைக் கருத்தறிதல் (5 ம.பெ.)

ஒரு காட்டில் ஒரு நாய் வசித்து வந்தது. அதற்கு இரண்டு குட்டிகள் இருந்தன. அதே காட்டில் ஒரு நரியும் இருந்தது. அது நாய்க்குட்டிகளைக் கொன்று தின்ன திட்டமிட்டுக் கொண்டிருந்தது. அதனால் நாயும் குட்டிகளும் வேறு இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றன.

அவை செல்லும் வழியில் சிறு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடக்கப் பாலம் எதுவும் இல்லை. நாய் தன் குட்டிகளுடன் ஆற்றைக் கடக்க நினைத்தது. ஆனால், குட்டிகளுக்கு நீந்தத் தெரியாது. எனவே ஆற்றைக் கடக்க பயந்தன. நாய் முதலில் ஆற்றை நீந்திக் கடந்து விட்டது. குட்டிகள் அதனுடன் போகாததால் அது குரைத்துக் கொண்டே இருந்தது.

அப்போது இரண்டு சிறுவர்கள் அங்கு நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரும் குட்டிகளின் மேல் இரக்கப்பட்டனர். அவர்கள் ஆளுக்கொரு நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு தாயிடம் சேர்த்தனர். நாய் தன் வாலை ஆட்டியது.

**கீழ்க்காணும் கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிந்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

26. நாய் தன் குட்டிகளுடன் எங்கே சென்றது?

1) வேறு காட்டிற்கு
2) ஆற்றுக்கு
3) வேறு இடத்திற்கு ( )

27. குட்டிகள் ஏன் ஆற்றைக் கடக்க பயந்தன?

1) நீந்த பயந்ததால்
2) நீச்சல் தெரியாததால்
3) பாலம் இல்லாததால் ( )

28. குட்டிகள் அதனுடன் போகாததால் நாய் என்ன செய்தது?

1) சிறுவர்களை அழைத்தது
2) குட்டிகளுக்கு நீந்த உதவியது
3) குரைத்துக் கொண்டிருந்தது ( )

29. சிறுவர்கள் குட்டிகளுக்கு எப்படி உதவி செய்தனர்?

1) ஆளுக்கொரு நாய்க்குட்டிகளைத் தூக்கினர்.
2) குட்டிகளுக்கு நீந்த உதவினர்.
3) குட்டிகளை அழைத்துச் சென்றனர். ( )

30. நாய் எவ்வாறு சிறுவர்களுக்கு நன்றி கூறியது?

1) தன் காலைத் தூக்கிக் காட்டியது
2) அவர்களை வணங்கியது
3) தன் வாலை ஆட்டியது ( )

## முன்னுணர்வு கருத்தறிதல் (5 ம.பெ)

**பகுதியைப் படித்து விடுபட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.**

முத்து திடுக்கிட்டுப் படுக்கையை விட்டு எழுந்தான். அவன் 31. ________________ பார்த்தான். மணி ஏழாவதற்குப் பத்து நிமிடமே இருந்தது. அவன் அவசர அவசரமாகக் குளியல் 32. ________________ ஓடினான். தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு குளியல் அறையிலிருந்து 33. ________________ வந்தான். தன் சீருடையை எடுத்து அணிந்துகொண்டான். பின்னர், புத்தகப் பையை எடுத்து 34. ________________ மாட்டிக்கொண்டான். அறையை விட்டு வெளியே வந்தான். அப்போது அவனுடைய 35. ________________ கூடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவனைக் கண்டதும் அவர்கள் சிரிக்க ஆரம்பித்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமை.

| | | |
|---|---|---|
| பெற்றோர் | தோளில் | வெளியே |
| அறைக்கு | கடிகாரத்தை | கழுத்தில் |

## <u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (10 ம.பெ)

**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை எழுது.**

ஒரு நாள் ஒரு முயல் காட்டுப் பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தது. திடீரென்று, எங்கிருந்தோ ஒரு சத்தம் கேட்டது. முயல் திரும்பிப் பார்த்தது. அங்கே ஒரு பள்ளம் தெரிந்தது. முயல் அந்தப் பள்ளத்தினுள் எட்டிப் பார்த்தது.

அங்கு மான் ஒன்று பள்ளத்தில் சிக்கிக் கொண்டிருந்தது. அது மேலே வர முடியாமல் கவலையாக இருந்தது. முயல் மான்மீது இரக்கம் கொண்டது. ``மானே! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்,`` என்று முயல் கூறியது.

முயல் தன் நீண்ட வாலைப் பள்ளத்தினுள் விட்டது; வாலைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வரும்படி மானிடம் கூறியது. மானும் அவ்வாறே செய்தது. முயல் மானைக் காப்பாற்றியதால் மான் முயலிடம் நன்றி கூறியது.

36. முயல் எங்கு நடந்து சென்றது?

37. மான் ஏன் கவலையாக இருந்தது?

38. முயல் மானிடம் என்ன கூறியது?

39. மான் எப்படி பள்ளத்திலிருந்து மேலே வந்தது?

40. மான் முயலிடம் ஏன் நன்றி சொன்னது?

P3 SA - 2

P3
TESTPAPER 8

நான் என் நண்பனுடன்.....

1. 1 2. 2 3. 4 4. 1 5. 1

6. ஒழியேல் 7. ஏற்பது 8. விளம்பேல் 9. ஒப்புரவு 10. மறவேல்

11. 3 12. 4 13. 2 14. 3 15. 1

16. நீலம் 17. மழை 18. குழி 19. அழை 20. வாலை

21. சாங்கி கடற்கரையில் 22. மணல் வீடு 23. வண்ணங்களை
24. கயிறு 25. பரிசுகளை

26. 3 27. 2 28. 3 29. 1 30. 3

31. கடிகாரத்தை 32. அறைக்கு 33. வெளியே 34. தோளில்
35. பெற்றோர்

36. முயல் காட்டுப் பாதையில் நடந்து சென்றது.

37. மானால் பள்ளத்திலிருந்து மேலே வர முடியாததால் அது கவலையாக லிருந்தது.

38. முயல் மானிடம், "மானே! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்," என்று கூறியது.

39. மான் முயலின் நீண்ட வாலைப் பிடித்துக்கொண்டு பள்ளத்திலிருந்து மேலே ஏறி வந்தது.

40. முயல் மானைக் காப்பாற்றியதால் மான் முயலிடம் நன்றி கூறியது.